முருகப்பெருமான் துணை

**மகான் மஸ்தான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.05.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தவராஜனே அரங்கா வாழ்க
தரணி காக்க வந்த நல்
அவதார ஞானியே வாழ்க
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறைவிலா மூவை திகதி கதிர் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 15 ம் நாள், 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு மஸ்தான் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மைபட தரும வழிகாட்டும்
ஞான தேசிகன் ஆசிதனை
நம்பிக்கை கொண்டு ஏற்றுவர
4. வருகவே அரங்கன் வழியில்
வையகம் தனில் ஞானவான்கள்
பெருமளவில் நிரம்பி இனிதே
பேருலகம் பாதுகாப்பு அடையும்
5. அடையுமே உலகம் தன்னில்
அறமுடன் வாழும் வாழ்க்கை
இடர்நீக்கும் மனிதன் வினைபோக்கும்
இல்லாமை எனும் நிலை வாராது
6. வாராமல் எல்லா வகையும்
வளர்ச்சிப் பாதுகாப்புக் கூடி
தாரம் வாரிசுகள் சுற்றங்கள்
தகுதிமிக்க மித்திரர்கள் நிறைந்த
7. நிறைந்த நல் சமூக மாற்றமாக
நிலவுலகம் தானும் காண்கும்
வறுமை வெல்லும் வண்ணம்
வளமும் பலமும் சேர்க்கும் வண்ணம்
8. வண்ணமதாய் மாற்றம் தன்னை
வருமுலகில் அரங்கன் சேவையில்
மண்ணுலகம் கண்டடையும்
மகத்துவம் மிக்க தவசி
9. தவசி அரங்கன் அவதாரம்
தரணி எங்கும் அறியப்பட
புவனம் காக்கும் எல்லா சக்திகளும்
புண்ணியவழி இறங்கி அருள

10. அருளவே அரங்கன் மார்க்கம்
ஆபத்திலா மீட்டுக் காக்கும்
அருளுடன் அழியாமை தரும்
ஆளுமைக்கும் ஞான சக்தி தந்து

11. தந்துமே உலகம் எங்கிலும்
தரும ஞான ஆட்சி மலரும்
விந்தை மிகு மாற்றம் நடக்கும்
விளம்பிய அருளாசி முற்றே

–சுபம்–

சாதி, மத இன பேதங்களை கடந்து உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பாவித்து அன்பு செலுத்தியவர் மகான் மஸ்தான் சாகிபு அவர்கள். உலகில் மனிதர்களாக பிறந்த அனைவரும் பத்துமாதம் கருவில் இருந்து பிறந்தவர்கள்தான். இதில் வேறுபாடுகள் கிடையாது. மகான் வள்ளுவக் கடவுள் திருக்குறளில்

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.
– திருக்குறள் – பெருமை – குறள் எண் 972.

செய்யும் தொழிலில்தான் உயர்வு தாழ்வு உள்ளதே தவிர பிறப்பில் இல்லை என்பது மகான் வள்ளுவப் பெருமானின் உபதேச கருத்தாகும்.

எண்சா ணுயரத் திருக்கும் பனங்கள்
இறக்கி உண்ணேன் மனக் கண்ணே – கெட்ட
கஞ்சாவும் கள்ளும் அரக்கும் அபினும்
கலப்பதை விடுவெறு மண்ணே – நீ
தஞ்சா வூராளு மகராஜன் பதம்
தணிந்து நமஸ்காரம் பண்ணே – என்றன்
கொஞ்சப் பெலனுள்ள காயா புரியென்ற
கோட்டை இடித்திடும் எண்ணே – அவர்
அஞ்சாதிடிப்பரென்று எண்ணே – இனிக்
கொஞ்சிக் கொஞ்சி லாயிலாக
–மகான் மஸ்தான் சாகிபு கீர்த்தனைகள் 1031

1. எந்தை மஸ்தான் இணையடி போற்றிட
சிந்தையும் மகிழ சிவபதம் ஆவாரே.

2. அற்புத தஞ்சையில் அருளினார் பெரியகோவில்
அற்புத கருவூரார் அருளினைப் போற்றுவோம்.

–முருகனடிமை அரங்கமகா தேசிகர்.